டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 18.10.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 102 - Madurai | Online Edition

# செறிவூட்டப்பட்ட அரிசி

## நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை எதிர்கொள்வதற்கான மத்திய அரசின் லட்சிய முயற்சி

புது தில்லி, அக்.17

பிரதமரின் ஏழைகள் நல இலவச உணவுத் திட்டம் மற்றும் பிற நலத்திட்டங்கள் உட்பட அரசின் அனைத்து திட்டங்களின் கீழ் செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்கும் திட்டத்தை 2024 ஜூலை முதல் 2028 டிசம்பர் வரை தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதால், நாட்டில் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை எதிர்த்துப் போராடுவதற்கான மத்திய அரசின் முன் முயற்சி தொடர்கிறது.



தலசீமியா மற்றும் அரிவாள் செல் இரத்த சோகை போன்ற ஹீமோகுளோபினோபதிகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் உட்பட அனைவருக்கும் செறிவூட்டப்பட்ட அரிசி நுகர்வு பாதுகாப்பானது என்பதை அறிவியல் சான்றுகள் ஆதரிக்கின்றன என்பதை குறிப்பிடவேண்டியதில்லை.

இந்தியாவில் செறிவூட்டப்பட்ட அரிசி தொடக்கத்தில் தலசீமியா மற்றும் அரிவாள் செல் ரத்த சோகை உள்ளவர்களுக்கு உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (உணவுகளின் செறிவூட்டல்) விதிமுறைகள், 2018-ன் படி, சுகாதார ஆலோசனையாக வழங்கப்பட்டது. இந்த ஆலோசனை ஒரு விஞ்ஞானக் குழுவால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. வேறு எந்த நாடும் இதுபோன்ற ஆலோசனையை அளிக்கவில்லை என்று குறிப்பிட்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, இந்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறை, இந்த ஹீமோகுளோபினோபதி உள்ளவர் களுக்கு இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசியின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்காக 2023-ல் ஒரு பணிக்குழுவை அமைத்தது.




அத்தகைய நபர்களுக்கான எந்தவொரு பாதுகாப்பு எதிர் வினைகளையும் தற்போதைய சான்றுகள் ஆதரிக்கவில்லை என்று பணிக்குழுவின் அறிக்கை முடிவு செய்தது. தலசீமியா நோயாளிகளுக்கு ரத்த மாற்றத்தின் போது உறிஞ்சப்படும் இரும்புச்சத்துடன் ஒப்பிடும் போது செறிவூட்டப்பட்ட அரிசியி லிருந்து இரும்பு உட்கொள்ளல் மிகக் குறைவாகும்.

இந்த மதிப்பீட்டைத் தொடர்ந்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் தலைமை இயக்குநர் தலைமையிலான குழு விரிவான மதிப்பாய்வை நடத்தியது.

இந்த உலகளாவிய விஞ்ஞான மதிப்பாய்வின் அடிப்படையில், இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசி இந்த ஹீமோகுளோபி னோபதி உள்ளவர்களுக்கு சுகாதார ஆபத்தை ஏற்படுத்துகிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வையம்பட்டி கிராமத்தில் வேளாண்மை துறை திட்டங்கள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



திருச்சி, அக்.17

திருச்சி மாவட்டம், வையம்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பாக பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச் சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் டெய்சி கரோலின், தக்கை பூண்டு வயலினை ரோட்டாவேட்டர் கொண்டு மடக்கி உழவு செய்வதனை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். முதலமைச் சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் செயல்பாடுகளை வேளாண்மை துணை இயக்குனர் சரவணன் விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் முத்துசாமி, வேளாண்மை அலுவலர் கவின், துணை வேளாண்மை அலுவலர் ராஜா சந்திரமோகன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

# திருச்சுழி வட்டாரத்தில் விதை இருப்பு விபரம்

## வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

விருதுநகர், அக்.17

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரம் வேளாண்மைத் துறையில் விவசாயிகளுக்கு வேளாண் விதைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

சூரியகாந்தி, பருத்தி, குதிரைவாலி, கம்பு, போன்ற பயிர்களில் விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சூரியகாந்தி விதை – KBSH 85, பருத்தி–CO 17, குதிரைவாலி எம்.டி.யு – 1 கம்பு– O 10

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

போன்ற ரகங்கள் இருப்பில் உள்ளது.

குதிரைவாலி 1 கிலோ 71 ரூபாய் எனவும், மானியம் 30 ரூபாய் போக 41 ரூபாய் விலையிலும், சூரியகாந்தி விதை 1 கிலோ ரூ 635 விலையிலும், வேளாண் விரிவாக்க மையம், ம.ரெட்டிய பட்டியில் விதைகள் விற்கப்பட்டு வருகின்றது.

எனவே திருச்சுழி வட்டார விவசாயிகள் வேளாண் விதைகளை வாங்கி பயனடைய வேண்டுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ம.காயத்ரி தேவி தெரிவித்தார்.




# பயறு வகைகளில் பண்ணைப்பள்ளி



சேலம், அக்.17

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், இராஜாபாளையம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி வகுப்பு துணை வேளாண்மை அலுவலர் பி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

பண்ணைப்பள்ளி என்பது விதை முதல் விதை வரை என்ற தத்துவத்தின் அடிப்படையில் பயறு வகை பயிர்களான உளுந்து, துவரை, பச்சைப்பயறு, கொள்ளு, தட்டைப்பயறு ஆகிய பயிர்




களில் பருவம், ரகம் தேர்வு, நடவு, களைமேலாண்மை, உர மேலாண்மை, பூச்சி நோய் மேலாண்மை, அறுவடை மற்றும் அறுவடை பின்செய் நேர்த்தி ஆகிய பயிரின் நிலைகளுக்கு ஏற்ப ஆறு வகுப்புகள் நடைபெற உள்ளது.

இப்பண்ணைப்பள்ளியின் முதல் வகுப்பு உளுந்து பயிருக்கு ஏற்ற பருவம், இரகம் , விதை நேர்த்தி மற்றும் விதைப்பு குறித்த தொழில்நுட்பப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஓய்வு பெற்ற துணை வேளாண்மை இயக்குநர் கே.பழனிசாமி சிறப்பு பயிற்சி-யாளராக கலந்து கொண்டு 25 விவசாயிகளை 5 குழுக்களாக பிரித்து பயிற்சி அளித்தார். உயிரியல் கட்டுபாட்டு காரணி டிரைகோடெர்மா விரிடி கொண்டு உளுந்து விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வட்டார தொழில்ட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் ச.தனபால் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி கலந்து கொண்டனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 17.10.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 24 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 24 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 38 | 42 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 67 |
| 2 | வெண்டை | 40 | 44 | 58 | மேரக்காய் | 20 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 45 | 50 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 35 | 38 | 60 | கேரட் | 45 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 35 | 40 |
| 6 | புடலை | 32 | 36 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 32 | 36 | 63 | டர்னிப் | 40 | 44 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 24 | 28 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 50 | 140 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 57 | 71 | பென்னி பீன்ஸ் | 150 | 160 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 46 | 56 | 72 | குடமிளகாய் | 55 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 45 | 48 | 74 | பஜ்ஜி மிளகாய் | 30 | 35 |
| 19 | முருங்கை | 60 | 66 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 100 | 110 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 30 | 36 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 60 | 70 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 32 | 36 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 35 | 40 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# மாரமங்கலம் விவசாயிகள் உள் மாவட்ட அளவிலான கண்டுணர்வு சுற்றுலா



சேலம், அக்.17

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், மாரமங்கலம் பஞ்சாயத்து சார்ந்த 50 விவசாயிகள் வேளாண்மை துறையின் கீழ் ஆத்மா திட்டத்தில் உள்ள உள் மாவட்ட அளவிலான கண்டுணர்வு சுற்றுலா ஆத்மா திட்டச் சேர்மன் தங்கசாமி மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் ப.தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக்கண்டுணர்வு சுற்றுலாவில் கலந்து கொண்ட விவசாயிகள் பாரம்பரிய நெல் ரகம் அதன் பயன்பாடு குறித்து அறிந்து கொள்வதற்காக அயோத்தியாபட்டினம் வட்டாரம் சென்றனர். அங்கு விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் ரகம் பற்றி சஞ்சய் பெருமாள் பல வகையான நெல் ரகங்கள் அதன் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அனைத்து புதிய பாரம்பரிய நெல் ரகங்களும் விவசாயிகளின் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் செல்வராஜ் இயற்கை விவசாயம் நெல் சாகுபடி எவ்வாறு செய்வது என்பது குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளை வயல்வெளிக்கு அழைத்து சென்று அங்கு நடவு முறை விதைநேர்த்தி களை கட்டுப்படுத்தும் உபகரணங்கள் பயன் படுத்தும் முறை நுண் ஊட்டச்சத்து மலாண்மை அறுவடை செய்தல் மற்றும் பதப்படுத்துதல் குறித்தும் செயல் விளக்க முறையில் எடுத்துரைக்கப்பட்டது. இக்கண்டுணர்வு சுற்றுலாவில் விவசாயிகள் கலந்து கொண்டு அங்கு வைக்கப்பட்டிருந்த நெல் ரகங்களை காட்சி மூலம் கண்டு பயன் அடைந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மு.சோபனா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் துரையரசு அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தேவகோட்டை வட்டாரத்தில் ராபி பருவ கால பயிற்சி



சிவகங்கை, அக்.17

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டாரத்தில் தளக்காவயல், சிறு நல்லூர் மற்றும் திடக்கோட்டை கிராமங்களில் ராபி பருவகால பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் தேவகோட்டை தலைமையேற்று நடத்தினார். இப்பயிற்சியில் அவர் கூறியதாவது, தற்பொழுது நெற்பயிர் 15 -20 நாள் வயதுள்ளதாக உள்ளது. ஆங்காங்கே துத்தநாக சத்து பற்றாக்குறை அறிகுறிகள் தென்படுகின்றன. மேலும் நல்ல மழை பெய்து வருகிறது. அதனால் விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் அல்லது 5 கிலோ நெல் நுண்ணுரமிட்டு துத்தநாக பற்றாக்குறையை போக்க அறிவுறுத்தினார். இவைகள் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானியத்தில் கிடைப்பதாக கூறினார்.

பயிற்சிக்கு வருகை புரிந்து சிறப்பு பயிற்சி அளித்த முனைவர் ராஜேஷ் நல்லையா, சம்பா பருவத்தில் நெற்பயிருக்கு செய்ய வேண்டிய தொழில்நுட்பங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தார். நெல் வயலை சுற்றியுள்ள வரப்புகளில் உளுந்து, பாசிப்பயறு, கீரை வகைகள் மற்றும் வெண்டை போன்ற பயிர்களின் விதைகளை வரப்புகளில் ஊன்றி பயிர் பாதுகாப்பு செய்ய கேட்டுக் கொண்டார். இப்பயிர்சியில் கலந்து கொண்ட துணை வேளாண்மை அலுவலர் முத்தையா, நொச்சி மற்றும் ஆடாதொடா செடிகளை வரப்பு மற்றும் தரிசு நிலங்களில் நடவு செய்து அதன் இலைகளை பூச்சி கட்டுப்பாடுக்கு பயன்படுத்த கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் பொன்னழகு, வேளாண்மை துறையின் மூலம் வழங்கப்படும் இடுபொருள்கள் மானிய விபரங்களை எடுத்துரைத்து உயிர் உரங்களின் பயன்பாடு பற்றி பேசினார். நெற்பயிரை தாக்கும் சாரு உறிஞ்சும் பூச்சிகள் வரப்பில் உள்ள பயறு வகை பயிர்களால் ஈர்க்கப்படுகிறது. இதனால் நெல் பயிரைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிக்கு மருந்து தெளிப்பது தேவையற்றது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

மேலும் நெல் வயல்களில் ஆங்காங்கே பறவை தாங்கிகள் அதாவது கம்புகளில் வைக்கோல் அல்லது துணி சுற்றி ஆங்காங்கே ஊன்றி வைத்தால் பறவைகள் வந்து அதில் அமரும் ஆந்தைகளும் வந்து அமரும் ஆந்தைகளால் எலி சேதம் தவிர்க்கப்படுகிறது.

மேலும் பறவைகள் மூலம் நெல் பயிரைத் தாக்கும் புழுக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு எளிய முறையில் நெற்பயிரை பாதுகாத்து அதிக மகசூல் பெற கருத்து தெரிவித்தார். தேர்வு செய்யப்பட்ட 40 விவசாயிகள் தளக்காவயல் மற்றும் சிறுநல்லூர் கிராமங்களிலிருந்து வந்து கலந்து கொண்டார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் நொச்சி மற்றும் ஆடுதொடா செடிகள் வழங்கப்பட்டன. அட்மா திட்டத்தின் மூலம் நடத்தப்பட்டு வருகின்ற இப்பயிற்சிகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் தமிழ்செல்வி எஸ்தர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அர்ச்சனா, குருதாஸ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார்கள்.



# மழைக்கு பின் விதையை சேமிக்கலாம்

விதை அறுவடை செய்த காலம் முதல் நடவு செய்யும் காலம் வரை முளைப்புத் திறன் மற்றும் வீரியம் குறையாமல் பராமரிப்பதே விதை சேமிப்பு. சரியான ஈரப்பதத்தில் சேமித்து வைத்தால் தான் அதன் வீரியம் பராமரிக்கப்படும். பிற இன கலப்பு இல்லாமல் பாதுகாக்க வேண்டும்.

நெல் விதைகளில் 13 சதவீத ஈரப்பதம் அளவிற்கு உலர்த்தி சாக்கு அல்லது துணிப்பையில் 9 முதல் 12 மாதங்கள் வரை சேமிக்கலாம். ஈரப்பதத்தை 10-12 சதவீத அளவிற்கு குறைத்தால் மெல்லிய பாலித்தீன் உள் உறை கொண்ட சாக்குப் பைகளில் ஒன்றரை ஆண்டுகள் வரை பாதுகாக்கலாம். மக்காசோளம், சோளம் மற்றும் கம்பு விதைகளில் 12 சதவீதம், துவரை, உளுந்து, பாசிப்பயறு, கொண்டைக் கடலை, அவரை, கொள்ளு, தட்டைப் பயறு விதைகளில் ஈரப்பதம் 9 சதவீத அளவிற்கு குறைத்து சாக்கு அல்லது துணிப்பைகளில் 8 முதல் 9 மாதங்கள் வரை சேமிக்கலாம். கடலை, எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர் விதைகளை 5-8 சதவீதம் அளவிற்கு உலக்ஷித்தி உள் உறை கொண்ட சாக்குப் பைகளில் 12-15 மாதங்கள் வரை சேமிக்கலாம்.

பாரம்பரிய தொழில் நுட்பத்தின் படி சேமிப்புக் கிடங்கில் நொச்சி, புங்கம் மற்றும் வேம்பு இலைகளை வைத்தால் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம். பயறு வகை பயிர்களின் விதைகளுடன் செம்மண் சேற்றுக் கலவை கலந்து காய வைத்து சேமித்தால் பூச்சி தாக்குதலை தடுக்கலாம். பருவமழை காலத்திற்கு பின்பு அறுவடை செய்த விதைகளை வெயிலில் உலர்த்தி சரியான ஈரப்பதத்துடன் சேமித்து வைக்க வேண்டும். ஆதலால், விவசாயிகள்,வேளாண் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளின் ஈரப்பதத்தினை அறிந்து கொள்ள, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறையின் கீழ் செயல்படும் மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில், விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- வீதம் செலுத்தி பரிசோதனை செய்யலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் ம.மகாலட்சுமி, வேளாண்மை அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி கேட்டுக் கொண்டனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி தெளிப்பு
1லி. நீருக்கு 5 மி.லி
IFFCO
NANO UREA PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# உலக உணவு தினத்தின் முக்கியத்துவம் தெரியுமா?

உலகம் முழுவதும் பசி, பட்டினியை போக்க வேண்டும் என்றும் அனைவருக்கும் தரமான சத்துயான உணவு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக தான் 1979ஆம் ஆண்டிலிருந்து அக்டோபர் 16ஆம் தேதி உலக உணவு தினமாக நாடெங்கும் அனுசரிக்கப்படுகிறது நாம் அறிந்தே. இன்றைய நிலையில் வசதி படைத்தவர்களுக்கு உணவு கட்டுபாடாகவும் எளியவர்களுக்கு தட்டுபாடாகவும் உள்ளது.

**இந்த ஆண்டிற்கான கருப்பொருள் (THEMES) என்ன?**

'ஆரோக்கியமான நாளைக்காக இன்றைய பாதுகாப்பான உணவு' என்பதாகும்.

**பசி பட்டினியின் இன்றைய நிலை**

கொராணா நோய் தொற்றிற்கு பிறகு இந்த நிலைமை மோசமடைந்துள்ளது. உலக உணவு தினம் கொண்டாடப்படும் நிலையில் நடப்பு ஆண்டிற்கான உலக பட்டினி குறியீட்டு அறிக்கையில், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை விட நம்முடைய இந்தியா மோசமான நிலையில் உள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ளும் போது இதனை தடுக்க என்ன என்ன வழிவகைகளை கையாள வேண்டும் என்பது நமக்கு இந்த தினவு நினைவு படுத்துகிறது.

**உலக பட்டினி குறியீட்டில் இந்தியாவின் நிலை**

19வது உலக பட்டினி குறியீட்டில் (WORLD HUNGER INDEX) இந்தியாவானது 105வது இடத்தில் உள்ளது. இதன்படி பார்த்தால் இந்தியா தீவிரமான பசி பட்டினி பிரச்சனைகள் கொண்ட நாடாக இந்தியா வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் குழந்தைகளிடையே ஊட்டசத்து குறைபாடு (MAL-NUTRITION) பாதிப்பு அதிகரித்து உள்ளது. வளர்ச்சி குன்றியவர்கள் 35.5%, 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 2.9%, ஊட்டசத்து குறைபாடு 13.7% யாக உள்ளது.

**உலக அளவில் என்ன நிலைப்பாடு?**

உலக முழுவதுமாக 73.3% மக்கள் பசி பட்டினியை எதிர் கொள்ளுகின்றனர். 280 கோடி மக்களால் சத்தான உணவு களை வாங்கிட முடியவில்லை என்ற சூழ்நிலை தான் நிலவுகிறது.

**உலக உணவு தினத்தில் நம்முடைய விவசாயிகள் என்ன செய்ய வேண்டுமென உறுதி எடுக்க வேண்டும்?**

1) எக்காரணம் கொண்டு நிலங்களை தரிசாக போடக்கூடாது.

2) நிலத்தை சுற்றி சத்தான பழ மரங்களை ஒவ்வொரு விவசாயியும் நடவேண்டும்.






**அரசு என்ன செய்ய வேண்டும்?**

1) ரேசன் கடையில் (PDS) உணவு பொருட்களை தங்கு தடையின்றி வழங்க வேண்டும்.

2) பள்ளி சிறார்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குவதில் பால், முட்டை போன்ற ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்கிட வேண்டும்.

3) கிராமப்புறங்களில் மக்கள் எளிதாக வாங்கி சாப்பிட சத்தான உணவு வகைகளை மானிய விலையில் வழங்கிட வேண்டும்.

ஆரோக்கியமான சமுதாயத்தைபடைக்க சிறுதானியங்கள், காய்கறி, பழங்களை உண்டு, வளமையான இந்தியாவை உருவாக்கி, ஆரோக்கியமான வாழ்வு வாழுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகளுக்கு பயிற்சி

சிவகங்கை, அக்.17

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட நிதியின் 2024-2025-ம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்தவேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சீவலாதி கிராமத்தில் 17.10.24 அன்று கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது.





இப்பயிற்சியில் சிவகங்கை வேளாண்மை துணை இயக்குநர் பயிற்சியில் தலைமையேற்று பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கிராம வேளாண் முன்னேற்றக்குழு செயல்பாடு அமைப்பு மற்றும் அதன் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். மேலும் தொழில்நுட்ப ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை சாகுபடி முறைகளான பூஞ்சாண விதை நேர்த்தி திரவ உயிர் உரங்கள் நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகள் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் இயற்கை வேளாண்மை அறுவடை செய்த பின் நேர்த்தி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

இளையான்குடி வேளாண்மைஉதவி இயக்குநர் தங்கபாண்டியன் விவசாயிகளுக்கு உயிர் உரங்களான சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் மண்ணின் மூலம் பரவும் நோய்களான வேரழுகல், வாடல் நோய், நாற்றழுகல் நோய் மற்றும் இலை வழி மூலம் பரவும் பூசண நோய்களான குலைநோய், இலையுறை கருகல் நோய், இலைப்புள்ளிநோய் மற்றும் ஆன்த்ராக்னோஸ் ஆகியவற்றின் பாதிப்பையும் குறைக்கிறது என்று விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக்கூறினார் . வேளாண் விரிவாக்க மையத்தில் பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தபடுவதாக விவசாயிகளுக்கு தெரிவித்துள்ளார்.

இளையான்குடி துணை வேளாண்மை அலுவலர் நடேசகுமார், உயிர் உரங்களான ரைசோபியம் உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயறு வகை தாவரங்கள் எண்ணெய் வித்து, நிலக்கடலை போன்ற பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை ரைசோபியம் என்னும் பாக்டீரியா செடிகளின் வேர்களில் வேர் முடிச்சில் சேகரிக்கப்படுகின்றன. வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோகிலா உயிர் உரங்களின் பயன்பாடுகள் மற்றும் அட்மா திட்டத்தில் செயல்படுத்தி வரும் செயல்விளக்கம் உள் மற்றும் வெளி மாவட்ட அளவிலான பயிற்சிகள் மேலும் மண் புழு உரங்கள் பயன்பாடுகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் சோபனா விவசாயிகளுக்கு இயற்கையான உயிர் உரங்களை பயன் படுத்துவதன் மூலம் மண் வளம் பாதுகாப்பதோடு இராசயன உரங்களின் செலவை குறைத்து அதிக மகசூல் கிடைக்கும். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஸ் மற்றும் சரண்யாஆகியோர் செய்திருந்தார்.

# விதையின் வீரியம் குறையாமலிருக்க ஈரப்பதம் அறிந்து சேமிப்பீர்!

புதுக்கோட்டை, அக்.17

தரமான விதையானது இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைச் சான்றளிப்புத் தரத்திற்கு ஏற்ற குறைந்தபட்ச முளைப்புத்திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் மற்றும் விதை நலத்துடன் கூடிய வீரியமும் கொண்டிருக்க வேண்டும்.



விதைகள் விற்பனைக்காகவும், அதிகப்படியான விதைகள் தேவையான தருணத்திற்காகவும், ஆதார வித்துக்களாகவும், மரபியல் தொகுப்பு விதைகளாகவும் சேமித்து வைக்கப்படுகின்றன. பொதுவாக உற்பத்தியாகும் விதைகளில் 20-25 சதவிகிதம் அடுத்த பருவத்திற்காக சேமிக்கப்படுகிறது. விதையின் வீரியத்தன்மை நிலைத்து நீடிப்பதற்கு ஈரப்பத்தின் அளவு முக்கியமானதாகும். இந்த ஈரப்பதமானது விதைகள் வைத்திருக்கும் கழனியில் உள்ள வெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தினால் பாதிக்கப்படுவதாக உள்ளது. எனவே விதைகளின் தரம் நீடித்திருக்க ஈரப்பத அளவினை பராமரித்தல் மிகவும் அவசியமானதாகும். ஈரப்பதம் பராமரிக்க கீழ்காணும் வழிமுறைகளை கடைப்பிடித்தல் மிகவும் முக்கியமானதாகும்.

1. காற்று புகும் பைகளில் வைக்கப்படும் விதையின் ஈரப்பதமானது 10-12 சதவிகிதம் அளவிற்கு பராமரிக்க வேண்டும்.

2. காற்று புகாத பைகளில் வைக்கும் விதைகளின் ஈரப்பத அளவு 6-8 சதவிகிதம் அளவில் பராமரித்தல் அவசியமனதாகும்.

3. விதைகள் வைக்கும் அறையின் வெப்பநிலை 15-20 செல்சியஸ் அளவில் பராமரித்தல் வேண்டும்.

4. காற்றின் ஈரப்பதத்தினை 50 சதவிகிதம் அளவில் பராமரிக்க வேண்டும்.

5. விதை சேமிப்பில் இருக்கும் போது பூச்சி தாக்குதல் காணப் பட்டால் 1 கிலோ விதைக்கு 0.5-1.0 சதம் என்றளவில் மாலத்தியான் 50 ஈசி (லிட்டருக்கு 10 மில்லி) கரைசலை விதைக்கிடங்கில் தெளிக்கலாம்.

6. விதைகளை அடுக்கும் பொழுது சுவற்றினை ஒட்டி அடுக்காமல் குறைந்தது 3 அடி தள்ளி அடுக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது விதைகள் சுவற்றிலிருந்து ஈரத்தினை உறிஞ்சாமல் பாதுகாக்க முடியும்.

7. விதை மூட்டைகளை அடுக்கும் போது அவற்றை 6-8 மூட்டைகளுக்கு மேல் ஒரேஅடுக்கில் அடுக்ககூடாது. அதற்குமேல் அடுக்கும் போது அடியிலுள்ள மூட்டைகளின் விதைகள் அழுத்தம் காரணமாக பாதிப்படைய வாய்ப்புள்ளது.

மேற்காணும் முறைகளில் விதைகளை பாதுகாத்து பராமரித்து வந்தால் விதையின் வீரிய தன்மை மற்றும் முளைப்புத்தன்மை நீண்ட நாட்களுக்கு பாதுகாக்கப்படுகிறது.

ராகி, எள், கீரை வகை விதைகள் போன்ற மிக சிறிய விதை களுக்கு ஈரப்பதம்அறிய 50 கிராம் என்றளவிலும் மற்ற அனைத்து விதைகளுக்கு 100 கிராம் என்றளவில் பாலித்தின் பைகளில் இட்டு

காற்று புகாத வண்ணம் பேக் செய்து ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்தி புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002 என்ற முகவரியில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி விதையின் ஈரப்பதத்தை அறிந்து கொள்ளலாம் என்று விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.



# அங்கக விதை நேர்த்தி முறைகள் மற்றும் பயன்கள்

அங்கக வேளாண் முறையில், மண்ணின் பௌதீக, இராசயன மற்றும் உயிரியல் பண்புகள் மேம்பட்டு மண்வளம் மேம்படும். இதனால் பயிர் வளர்ச்சிக்கு உகந்த எல்லா சத்துக்களும் கிடைப்பதால், விளைச்சல் பெருகுவதோடு, தரமான விளை பொருள்களும் கிடைக்கும். பொதுவாக, பயிர் விளைச்சலானது விதைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படும் விதைகளின் தரத்தைப் பொறுத்து உள்ளது. தரமான விதைகள் மற்றும் மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களை கையாள்வதால், சுமார் 40 சதவிகிதம் அதிகரித்த விளைச்சலை பெறலாம். அங்கக விதை உற்பத்திக்கு, சாதாரண விதை உற்பத்திப் போலவே சில தனிப்பட்ட தொழில்நுட்பங்களைக் கையாளவேண்டும்.

## விதை நேர்த்தி

பொதுவாக, அங்கக விதை உற்பத்தியில் விதை நேர்த்திக்கு உயிர் உரங்கள், தாவர இலைக் கரைசல்கள், இலைப்பொடிகள், பஞ்ச காவியா மற்றும் உயிர் கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

| வ. எண் | அங்கக விதை நேர்த்தி முறைகள் | பயன்கள் |
|---|---|---|
| 1. | விதைகளை கோமியத்தில் ஊற வைத்தல் | விதை முளைப்பு மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது |
| 2. | களிமண் விதைப் பூச்சு | விதை முளைப்பு மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது |
| 3. | ட்ரைகோடெர்மா மற்றும் பேசில்லஸ் சப்டிலிஸ் | வேர் சம்பந்தமான நோய்களை கட்டுப்படுத்துகிறது |
| 4. | சீமை அகத்தி பட்டை கரைசல், வசம்பு பொடி கரைசல் | விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சி களைக் கட்டுப்படுத்துகிறது |
| 5. | எருக்கு இலைக்கரைசல் | நெல்லித் தண்டு துளைப் பானைக் கட்டுப்படுத்துகிறது |
| 6. | அரளி இலைக்கரைசல் | வெங்காயத்தில் நுனி கருகல் நோயைக் கட்டுப்படுத்துகிறது |
| 7. | புங்கம் விதைக் கரைசல் | சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது |
| 8. | டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் /கிலோ | காய்கறிப் பயிர்களில் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்துகிறது |

**பல்வேறு பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் அங்கக விதை நேர்த்தி முறைகள்**

| வ. எண் | பயிர் | விதை நேர்த்தி முறைகள் |
|---|---|---|
| 1. | நெல் | விதைப்பிற்கு முன் நெல் விதைகளை பஞ்ச காவ்யாவில் 30 மணி நேரம் ஊறவைத்தல் அல்லது நெல் விதைகளை 20 சதவிகிதம் வசம்பு கரைசலில் (500 கிராம் / பவுடர்/ 2.5லிட்டர் / தண்ணீர்) 30 நிமிடங்கள் ஊற வைத்து பின்பு காடா துணியில் கட்டி வைத்தல் |
| 2. | கொண்டைக் கடலை | விதைகளை 20 சதவிகிதம் புதினா இலை கரைசலில் 12 மணி நேரம் ஊற வைத்து விதைத்தல் அல்லது ஒரு கிலோ விதைகளை மஞ்சள் (50 கிராம்) மற்றும் வசம்பு (15 கிராம்) பவுடரில் 10 மில்லி கலந்து 10 நிமிடங்கள் கழித்து விதைத்தல் |
| 3. | பயிறு வகைப் பயிர்கள் | விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம்/ கிலோ என்றளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல் |
| 4. | மக்காச்சோளம் | விதைகளை 2% பஞ்சகாவ்யா கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் |
| 5. | கம்பு மற்றும் ராகி | விதைகளை 2%பஞ்சகாவ்யா கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் |
| 6. | காய்கறி வகைகள் | விதைகளை (விரிடி 4 கிராம்/கிலோ டிரைக் கோடெர்மா விரிடியில் விதை நேர்த்தி செய்து விதைத்தல். விதைகளை 20% வசம்பு கரைசலில் (ஒரு பங்கு கரைசலை 5 பங்கு தண்ணீருடன் கலத்தல்) 20 நிமிடங்கள் ஊறவைத்து விதைத்தல் |

அங்கக வேளாண்மையைக் கடைப்பிப்பதன் மூலம் இயற்கை ஆதாரங்களையும், மண்வளத்தையும், பாதுகாத்து, சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கலாம். எனவே, அங்கக வேளாண்மையைப் பின்பற்றி தரமான பாதுகாப்பான உணவையும், மாசற்ற சுற்றுச் சுழலையும் நம் வருங்கால சந்ததியினருக்கு அளிப்பது நமது கடமையாகும்.

மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் சே.சிவசக்தி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தானியங்கி சொட்டு நீர் பாசனம்- ஓர் அறிமுகம்

தானியங்கி சொட்டுநீர் பாசனம் என்பது நேரம் காப்பகம் (timer), உணரிகள் (Sensors), கணினி போன்ற இயந்திர உதவிகளுடன் மிகக்குறைந்த மனித ஈடுபாட்டுடன் நீர்பாசனம் மேற்கொள் வதாகும். இத்தொழில்நுட்பம் மூலம் தண்ணீர் மற்றும் வேலையாள் பற்றாக்குறை சூழலில் பாசனநீர் உபயோகத்திறனை அதிகரிக்கும்.

**செயல்படும்முறை**

- மண் ஈரப்பதம் உணரிகள் மூலம்மண் ஈரப்பதம் நிமிடத்திற்கு நிமிடம் கண்காணிக்கப்படுகிறது.
- மண் ஈரப்பத உணரிகளின் தரவுகள் மைக்ரோகண்ட்ரோளர் அலகுக்கு செலுத்தப்பட்டு அதில் கணினி இயங்கும் விதம் மாற்றப்படுகிறது.
- அத்தரவுகள் ப்ளூடூத் அல்லது வைஃபை (ழுஷ்கூஷ்) போன்ற தொழில்நுட்ப கம்பியில்லா கடத்தியின் உதவியுடன் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்படுகிறது.
- இத்தரவுகளின்படி மண்ணின் ஈரப்பதம் குறைவான நிலையை எட்டும்போது சொலினாய்டு வால்வு மூலம் பாசன நீர்குழாய் திறக்கப்பட்டு பயிர்களுக்கு தானாகவே நீர்பாசனம் செய்யப்படுகிறது.
- இப்பணிகளை வேறு இடத்திலிருந்து கைபேசி மூலம் கண்காணிக்கும் வசதியும் உள்ளது.

**சொட்டுநீர் பாசனத்தைதானியங்கியாக மாற்றுவதன் பயன்கள்**

- மண்ணின் ஈரப்பதம் மற்றும் காலநிலையை பொருத்து பயிர் தேவைக்கு ஏற்ப துல்லியமாக நீர்பாசனம் செய்யப்படுகிறது. இதனால் அதிக பாசன நீர் விரையமாகுதல் தடுக்கப்படும்.
- இடுபொருட்கள் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கும்.
- வேலை ஆட்கள் தேவை குறையும்.
- தேவையான நீர் மற்றும் ஊட்டச்சத்து சரியான தருணத்தில் கிடைப்பதால் மகசூல் அதிகரிக்கும்.
- குறைவான பாசன நீர் உபயோகிப்பு மற்றும் கட்டுப்படுத்தப் பட்ட ஊட்டச்சத்து மேலாண்மையால் சுற்றுப்புறசூழல் பாதுகாக்கப் படுகிறது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.

# வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி நடைபெற்றது



திருச்சி, அக்.17

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரம் வேளாண்மை கல்வி நிலையத்தில் வேளாண்மை துறை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கிராம அளவிலான வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி நடைபெற்றது.

இதில் மூங்கில் வளர்ப்பு சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. மூங்கில் வகைகள், நீர்ப்பாசனம், உரமேலாண்மை, அறுவடை செய்தல், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் செய்தல், ஒப்பந்த சாகுபடி முறை பற்றி பேராசிரியர்கள் விளக்கி கூறினார்.

இதற்கான ஏற்பாட்டினை லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார், விஜய், கல்வி உதவியாளர் வேளாண்மை கல்வி நிறுவனம் குமுளூர், உதவி வேளாண்மை அலுவலர்கள் லால்குடி வட்டாரம், அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சபரிசெல்வன், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்து இருந்தனர். இப்பயிற்சியில் லால்குடி வட்டாரத்தை சார்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். இறுதியில் பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



# இயற்கை வேளாண்மை குறித்த மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, அக்.17

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண்மை துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மையத்தின் மூலம் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூரில் 40 விவசாயிகள் மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி முகாமிற்கு 14.10.24 முதல் 16.10.24 வரை ரவிசந்திரன், அட்மா – திட்ட ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை இணை இயக்குநர் (பொ) தலைமையிலும், ரஹ்மத் நிசா பேகம், வேளாண்மை உதவி இயக்குனர், பொன்னமராவதி வழி காட்டுதலின் படியும் அழைத்து செல்லப்பட்டனர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர், நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் மற்றும் தலைவரான முனைவர் கிருஷ்ணன் இயற்கை வேளாண்மை, தற்சார்பு வேளாண்மை, உயிர்ம வேளாண்மை ஆகியவற்றின் வேறுபாடுகளையும், இயற்கை வேளாண்மை மற்றும் உயிர்ம வேளாண்மையில் பயன் படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் குறித்தும், அவற்றின் முக்கியத் துவங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், முனைவர் ஜானகி, (உழவியல் துறை), துணை பேரா சிரியர், நுண்ணூட்ட சத்துக்கள் குறித்தும், பயிர்களுக்கு தேவை யான சத்துக்களின் வகைகள், அவற்றை கிரகிக்கும் முறைகள், எளிய முறையில் மண் வளத்தை மேம்படுத்துதல் ஆகியவை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் பரமேஸ்வரி (சுற்றுசூழல் அறிவியல்) துணை பேராசிரியர், பஞ்சகாவ்யம், தச காவ்யம், மீன் அமிலம், அமிர்த கரைசல், முட்டை அமிலம், கன ஜீவாமிர்தம், ஜீவாமிர்தம், ஐந்திலை கரைசல், 3G கரைசல் ஆகிய வற்றின தயாரிக்கும் முறைகளை செய்து காண்பித்தார். அவற்றின் செயல் முறைகளையும், பயன்களையும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் கவின் துணை பேராசிரியர், இயற்கை வேளாண்மை யின் மூலம் விளைவிக்கப்படும் கத்தரி, தக்காளி, வாழை, தென்னை போன்றவற்றை விவசாயிகளுக்கு நேரடியாக வயல்களில் காண் பித்து அவற்றில் கடைபிடிக்கப்பட்ட முறைகளை குறித்து விளக்க

மளித்தார். முனைவர் இராமசுப்ரமணியன், துணை பேராசிரியர், இயற்கை வேளாண்மையின் சந்தைப்படுத்துதல் முறைகள் குறித்து விளக்கமளித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சத்தியபாமா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முறையே பிரசாத், நவீன்குமார் மற்றும் PKVY திட்ட ஒருங்கிணைப் பாளர் திவ்யா ஆகியோர் செய்திருந்தனர்.




# காட்டுப்பன்றியை விரட்டும் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்த வேளாண் துறை மாணவர்கள்



விருதுநகர், அக்.17

விருதுநகர் மாவட்டம், கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை துறை மாணவர்கள் ஆத்மதர்ன், ஹரிஷ், மணிகண்டன், ராஜதுரை, சஞ்சய், சந்தோஷ் குமார், சம்பு நாத்து, கேஸ்ட்ரோ ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் வத்திராயிருப்பு வேளாண் உதவி இயக்குநர், பாட ஆசிரியர் முனைவர் ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் கங்காதரன் அறிவுரையின்படி சுந்தரப ாண்டியம் சுற்றி உள்ள கிராம விவசாயிகளுக்கு விழிப்புணர்வும், ஆலோசனையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

17/10/24 அன்று மகாராஜாபுரத்தில் விருதுநகர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய,வேளாண்மை துணை இயக்குநர் வளர்மதி, வேளாண் அலுவலர் கீதா மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன் தலைமையில் உழவர் விவாதக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்துகொண்ட வேளாண் துறை மாணவர்கள் காட்டுப்பன்றி விரட்டும் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.